**DEPOSITION OF WITNESS**
Judicial Form No. 53
(See Rule 42)
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No.678 /2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அம்ஜத் இப்ராகிம்கான் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 23.06.2022.

**முதல் விசாரணை:**

நான் தற்போது விருதுநகரில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிகிறேன் கடந்த 30.07.18 அன்று உடுமலை உணவு பாதுகாப்பு அலுவலராக பணி புரிந்தபோது உடுமலை வட்டார பகுதிக்குட்பட்ட தாராபுரம் ரோடுசிவசக்தி காலணி அருகில் ராகம் பேக்கரிக்கு மதியம் 1.00 மணி அளவில் ஆய்வுக்கு சென்றபோது அப்போது அங்கு பணியில் இருந்த பணியாளர் மற்றும் பொறுப்பாளர் கேசி. ஜெயராம் மற்றும் உரிமையாளர் சத்தியமோகன் 30.07.18 அன்று காலை 12.00 மணி அளவில் நான் என்னுடைய வழக்கமான ஆய்வுக்கு சென்றபோது பணியில்இருந்தபோது அவரது கடையில் இருந்த டீத்துாள் விற்பனைக்காக கண்ணாடி பாட்டிலில் வைக்கப்ட்டிருந்த டீத்துாளின் தரம் குறித்து சந்தேகத்தின் அடிப்படையில் அவர்களிடம் இருந்த 2 கிலோ டீத்துாள் சுத்தமான உலர்ந்த ஈரமில்லாத நெகிழி பாக்கெட்டில் 300 கிராம் வீதம் நான்கு மாதிரிகள் எடுத்திருப்பதாக தெரிவித்து படிவம் 5 ஏ இரண்டு பிரதிகள் தயாரித்து அதில் கேசி.ஜெயராமன் இடம் கையெழுத்து பெற்றுக் கொண்டு அருகில்

இருந்த சுரேந்திரன் என்பவரை சாட்சியாக இருக்குமாறு கேட்டேன் அவரும் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்தார். பின்பு அங்கு வந்த உரிமையாளர் சந்திய மோகன் இடம் பிரிவு 5 ஏ படிவத்தை ஒப்படைத்து அவரிடமும் சாட்சியுடமும் கையெழுத்து பெற்றேன். பின்பு மேற்படி 300 கிராம் மிக்சர் 96 என்ற வகையில் இரண்டுகிலோ மசால் மிக்சருக்கு ரூ.400 கொடுத்துவிட்டு ரொக்க ரசீதில் பொறுப்பாளர் மற்றும் சாட்சியிடம் கையெழுத்து பெற்றுக்கொண்டேன் அதன் ஒரு அடிக்கட்டையை ஜெயராம்இடம் கொடுத்தேன். பின்பு மேற்படி கடையில் வாங்கிய மிக்சரை காக்கி காகிதம் கொண்டு காற்று புகாத வண்ணம் நன்றாக சுற்றி மடித்து வைத்துவிட்டேன்.அதற்கு முன்னர் இன்னர் லேபில் சிலிப் மூலம் உணவு பொருள் விவரம் அடங்கிய குறிப்புகளை அதில் எழுதி ஒவ்வொரு அரை கிலோ மிக்சருககும் உள்ள பேக் செய்யப்பட்ட காக்கி கவரில் ஒட்டி அதில்நானும் கடையின் பொறுப்பாளர் ஜெயராமனும் தேதியுடன் கையெழுத்து செய்தோம். பின்பு அதன் ஒவ்வொரு அரை கிலோ மிக்சர் பாக்கெட்டிலும் மற்றொரு காக்கி காதிகம் சுற்றி கெட்டியான உணவு மாதிரி பொட்டலமாக மாற்றி அதில் வெள்ளை தாளை ஒட்டி மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் அவர்கள் கையொப்பம் அடங்கிய மாநில குறியிடு எண் மாவட்ட குறியீடுஎண் மற்றும் உடுமலை வட்டாரா குறியிடு எண் அடங்கிய வரிசை எண் 73/18–19 கொண்ட நீண்ட வெள்ளை நிற தாளை கீழிருந்து மேலாக ஒவ்வொரு உணவு மாதிரியிலும் நன்றாக நான்கு வெள்ளை நிற தாளையும் ஒட்டினேன். பின்பு ஒவ்வொரு உணவு மாதியும் முறுகேற்றப்பட்ட மாதிரி நூல் மூலம் அலுவலக நடைமுறை படி தயார் செய்தேன்.

2 பின்பு அன்றைய தினம் நான்கு உணவு மாதிரிகள் பொறுப்பாளரிடம் அனுப்புவதற்கு விருப்பம் கேட்டபோது விருப்பம்இல்லை என்று தனது உரிமையாளரிடம் கேட்டு எழுத்துமூலமாக சொன்னார். படிவம் 6 மொத்தம் 6 பிரதிகள் மதுரை உணவு பகுப்பாய்வளர் அவர்களுக்கு அன்றை தினமே 6 மாதிரிகளை அலவலக நடைமுறை படி உணவு மாதிரி ஒன்றை அனுப்பி வைத்துவிட்டேன். 3 உணவு மாதிரிகளை மாவட்ட நியமன பாதுகாப்பு அலுவலருக்கு அனுப்பி வைத்தேன்.

17.06.19 அன்று உணவு பகுப்பாய்வு அறிக்கை மாவட்ட அலுவலர் மூலம் பெறப்பட்டது. மேற்படி பகுப்பாய்வு அறிக்கையும் மாவட்ட நியமன அலுவலரிடன் அறிக்கையும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு 17.06.19 அன்று அனுப்பி வைக்கப்பட்டது.

பின்பு மேற்படி விவரங்களை மாவட்ட நியமன அலுவலருக்கு அனுப்பி அதை அவர் மாநில உணவு பாதுகாப்பு ஆணையருக்கு அனுப்பி அனுமதி பெற்று வழக்கு தாக்கல் செய்தேன். எதிரிகளுக்கு மேற்படி உணவு பாதுகாப்பு சட்டம் மூலம் விசாரித்து உரிய தண்டன வழங்கும்படி

கேட்டுக்கொள்கிறேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**